செ.வெ.எண்: 08/ஜுலை நாள் : 05.07.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை இன்று (05.07.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சோழந்தூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து சோழந்தூர் கிராமத்தில் ரூ.17 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஊராட்சி சேவை மைய கட்டிடத்திற்கான கட்டுமானப் பணிகளையும், தாய் திட்டத்தின் கீழ் ரூ.7.70 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மேம்பாட்டுப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு, ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியம், அழகர்தேவன்கோட்டை கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தின் கீழ் ரூ.15.50 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊரணி தூர்வாறும் பணிகளை ஆய்வு செய்து பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளியின் பசுமை வீட்டினைப் பார்வையிட்டார். தொடர்ந்து களக்குடி, ஏ.ஆர்.மங்கலம், மேலப்பனையூர் ஆகிய கிராமங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித்திட்டத்தின் கீழ் தலா ரூ.14.55 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.58.2 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஊராட்சி சேவை மைய கட்டிடங்களுக்கான கட்டுமானப் பணிகளையும், களக்குடி கிராமத்தில் ரூ.6.50 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மைய கட்டிட கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் சோழந்தூர் கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் மற்றும் அளவு குறித்து பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.ராமசாமி, வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ரோஜா, திரு.ராமச்சந்திரன் ஆகியோர் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**